செ. வெ.எண்.562 நாள்:06.07.2010

## செய்தி வெளியீடு

### அரிசி அரவை ஆலைகளை நவீன மயமாக்கப்பட வேண்டும்
### நவீன மயமாக்கப்பட்ட அரவை ஆலைகளுக்கு மட்டுமே அரவை முகவர் உரிமம் வழங்கப்படும்
### மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் அறிவிப்பு.

****

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை 476 அரவை முகவர்கள் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான அரிசியினை தயார் செய்யும் பணி மேற்கொண்டுள்ளனர். அரவை முகவர்கள் அரவை ஆலைகளை நவீன மயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் விதத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட அரவை ஆலைகளின் உரிமையாளர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (06.07.2010) காலை 10.30 மணிக்கு சென்னை ஹோட்டல் பிரிஸ்ஸில் ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் வரவேற்பு உரையாற்றி அரிசி ஆலைகள் நவீன மயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினார்கள். தொடர்ந்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் அவர்கள் முன்னிலை உரையாற்றி, அரவை முகவர்களுக்கு தேவையான நெல் அரவைக்கு வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், அரவை முகவர்கள் அரிசி ஆலைகளை நவீன மயமாக்கி, டிரையர், கலர் சார்ட்டர் போன்றவற்றை நிறுவி பாலிஷ் குறையாமலும், கருப்பு கலக்காமலும் தரமான அரிசியை கொடுக்க வேண்டும். அனைத்து அரவை ஆலைகளும் நவீன மயமாக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களில் நவீன மயமாக்கப்படும் அரவை ஆலைகளுக்கு மட்டுமே அரவை உரிமம் வழங்கப்படும். அரவை ஆலைகளை நவீன மயமாக்கப்படும்போது மின் கட்டணம் குறைய வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்தார்கள். கொள்முதல் செய்யப்படும் நெல்லில் 75 சதவிகிதம் தமிழகத்திலுள்ள அரிசி ஆலைகள் மூலம் அரவை செய்து பெறப்படுகிறது. மீதமுள்ள 25 சதவீதம் நெல்லினை அரசு நவீன அரிசி ஆலைகள் மூலம் அரவை செய்யப்படுகிறது. எஞ்சிய அரிசி தேவையை சத்தீஷ்கர், பஞ்சாப் மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்து மத்திய உணவு கழகத்தின் மூலம் பெறப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இருந்து பெறப்படும் அரிசியினை போல தமிழ்நாட்டில் உள்ள அரிசி ஆலைகளில் அரவை செய்து வழங்கப்படும் அரிசியினையும், அரவையிலுள்ள பல்வேறு கட்டங்களில் பதப்படுத்தும் முறைகளை மேம்படுத்தி பொது மக்கள் விரும்பி அரிசியினை வாங்கக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த ஆண்டு 14 சதவீதம் ஈரப்பதமுள்ள நெல் அரவை முகவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரவை முகவர்களுக்கு கூடுதல் கண்டுமுதல் அரிசி கிடைக்க வழியுள்ளது.

அரவை முகவர்களின் அரிசி ஆலைகளில் அரவை செய்து பெறப்படும் அரிசி பொது மக்களால் குறை சொல்லக் கூடியதாக இல்லாமல் இருக்க வேண்டும். பொது விநியோகத் திட்ட அரிசியை கடத்துபவர்கள், சமூக விரோதிகளின் ஆசை வார்த்தைகளை நம்பி அரவை முகவர்கள் விட்டில்பூச்சிகளாக பலியாகக் கூடாது. தவறு செய்யும் அரவை முகவர்கள் மீது கள்ளச்சந்தை தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது அரிசி இருப்பு இதுவரை இல்லாத அளவிற்கு சுமார் 4.5 இலட்சம் டன் உள்ளதால் இடப்பற்றாக்குறை உள்ளது. இதனை போக்க தேவையான கிடங்குகளை வாடகைக்குப் பிடித்து தேக்கமில்லாமல் அரிசியினை இயக்குவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், புழுங்கல் அரிசி அரவைக்கு முன்னதாக நெல்லினை சுத்தம் செய்ய வேண்டும்.

சேதமடைந்த மற்றும் நிறம் மாறிய நெல் மூட்டைகளை பிரித்தெடுப்பதன் மூலம் அரவை செய்யும்போது அரிசியில் சேதமடைந்த / நிறம் மாறிய அரிசியின் அளவினை கணிசமாக குறைக்க முடியும். கருக்காய் மற்றும் மிதக்கும் பொருட்களை பிரித்தெடுக்கப்பட வேண்டும். உஷ்ணம் 65 டிகிரி C வைக்க வேண்டும். நீரினை

அடிக்கடி மாற்ற வேண்டும். நெல்லின் ஈரப்பதம் 29 சதவீதம் முதல் 31 சதவீதம் வரை இருத்தல் வேண்டும். ஊரல் நேரம் குறைந்தபட்சம் 6 மணி நேரம் இருக்க வேண்டும். குறைவான ஊரல் அரிசியின் வயிற்றுப் பகுதியில் வெண்மையான நிறத்தினை உருவாக்கும். அதன் மூலம் அரிசி நொறுங்குவது மற்றும் குருணையாவதை அதிகரிக்கும். ஒரே முறையில் தொடர்ச்சியாக உலர்த்துவதாலும், குருணை அதிக அளவில் உண்டாவதற்கு வழி வகுக்கும். கிடங்கில் ஒப்படைக்கப்படும் அரவை அரிசியுடன் பொது விநியோகத் திட்ட அரிசி கலந்திருப்பது, தணிக்கையின்போது நெல் / அரிசி கோணிப் பைகள் கூடுதல் / குறைவாக இருப்பது, ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக ஆலை மற்றும் கிடங்கு பகுதிகளை வாடகைக்கு விடுவது, கழகத்திற்கு தொடர்பு இல்லாத நெல், அரிசி, பருப்பு மற்றும் தானிய வகைகளை இருப்பு வைப்பது, சரியான எடைக்கு சமன் செய்யாமல் மின் பயனீட்டு அளவில் அதிகம் / குறைந்த அளவு பயன்பாடு, முன் பண வைப்பு / வங்கி உத்தரவாதம் அனுமதி அளவினை விட அதிக அளவு நெல் இருப்பு காணப்படுவது ஆகியவைகள் உடனடியாகக் களையப்பட வேண்டும்.

அரவை முகவர்களின் சங்கத் தலைவர்கள் திரு.பாஸ்கர், தருமபுரி, திரு.ராமகிருஷ்ணன், சென்னை, திரு. சட்டநாதன், திருநெல்வேலி, திரு.இமயவீரன், திருவாரூர், திரு.திருநாவுக்கரசு, திருவள்ளூர் மற்றும் திரு. சின்னசாமி, மாநில தலைவர் ஆகியோர் அரவை முகவர்களின் கோரிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்கள். மேலும் மத்திய அரசு தரும் அரவைக்கூலி போதுமானதாக இல்லை, கடந்த 5 வருடங்களாக அரவைக்கூலி உயர்த்தப்படாமல் உள்ளது என்றும், கேரளா மற்றும் சத்தீஷ்கர் மாநிலங்களில் மாநில அரசே அரவைக் கூலியினை உயர்த்தி வழங்குவதைப் போல தமிழக அரசும் அரவைக் கூலியினை உயர்த்தித் தரவேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அரவை முகவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு தாயுள்ளத்தோடு பரிசீலிக்கும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இக்கோரிக்கை எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

**<u>வெளியீடு:</u>**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9